2013 ஏப்ரல் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 356, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**356—**

**புறவழிச் சாலை**

***20720**—**திரு. கா. தமிழரசன்:**

*மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மதுரையிலுள்ள உத்தங்குடி முதல் சமயநல்லூர் வரை புதிய புறவழிச்சாலை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) மதுரை-உத்தங்குடி முதல் சமயநல்லூர் வரை புதிய புறவழிச்சாலை அமைப்பதற்கான கருத்துரு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு, மேற்கொண்டு நடவடிக்கை தொடரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன் அவர்கள்.*

**திரு. கா. தமிழரசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், நாங்கள் அனைவரும் வணங்கும் அன்னையே! கழகத் தொண்டர்கள் அனைவரும், நாங்கள் காலையில் எழுந்தவுடன் சாமியைக் கும்பிடமாட்டோம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் படத்தைப் பார்த்துத்தான் கும்பிடுவோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே, நம்முடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் மட்டும்தான் புரட்சித்*

தலைவியை காலையில் எழுந்து கும்பிட்டுக் கொண்டிருந்தோம். இப்பொழுது தமிழ்நாட்டு மக்கள், தமிழ் மக்கள் எங்கெங்கு வாழ்கிறார்களோ அனைவரும் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவிற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உண்மையைப் பேசி, உண்மையான நிலையைப் பேசி, மற்றவர்களைப்போல மாற்றிப் பேசாமல் உண்மையைப் பேசி, தமிழ் மக்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்களுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து கொண்டிருக்கிற அந்தத் தலைவியை வணங்கி, அம்மா அவர்களை வணங்கி, என்னுடைய கேள்வியைத் தொடங்குகின்றேன்.

*முற்பகல் 10-30*

உத்தங்குடி முதல் சமயநல்லூர் வரை புறவழிச் சாலையை அமைத்துத் தர வேண்டும் என்று கேள்வி கேட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வில் இருக்கிறது என்று சொல்லி இருக்கின்றார்கள். ஏற்கெனவே உத்தங்குடியிலிருந்து புறவழிச் சாலை ஒன்று திருமங்கலம் வழியாக இருக்கின்றது. அது திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி வரை செல்வதால், மதுரை மாநகருக்குள்ளே செல்லாமல் போவதற்கு வசதியாக இருக்கின்றது. இதேபோல, உத்தங்குடியிலிருந்து சமயநல்லூர் வரை புறவழிச் சாலையை அமைத்துக் கொடுத்தால் திண்டுக்கல், சேலம், தருமபுரி மற்றும் பெங்களூரு செல்வதற்கு சிரமம் இல்லாமல் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இன்றைக்கு தமிழ்நாட்டிலேயே சென்னைக்கு அடுத்து மதுரைதான் பெரிய மாநகராட்சி. உத்தங்குடியில் நுழையும்போதே, மீனாட்சி ஆஸ்பத்திரி உள்ளிட்ட அனைத்து ஆஸ்பத்திரிகளும் இருக்கின்றன. அனைத்து மக்களும் புறவழிச் சாலை இல்லாமல் சிரமப்படுகிறார்கள். இந்தப் புறவழிச் சாலையை அமைத்துக் கொடுத்தால் நிச்சயமாக மாநகரினுடைய போக்குவரத்து நெரிசல் குறையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் அங்கேதான் இருக்கிறார். தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் எல்லோருக்கும் சேர்த்தே இந்தக் கோரிக்கையை வைக்கிறேன். அதனாலே, புறவழிச் சாலை அமைத்துக் கொடுத்தால் சேலம், தருமபுரி, பெங்களூரு வரை செல்வதற்கு ஏதுவாக இருக்கும் என்று கேட்டுக்கொண்டு, உடனடியாக இந்த ஆண்டே அதை

2013 ஏப்ரல் 30]

அமைத்துத் தருமாறு கேட்டு, மீண்டும் ஒரு முறை பேரவைத் தலைவர் அவர்களையும், நம்முடைய கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் வணங்கி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, உத்தங்குடி முதல் சமயநல்லூர் வரை புதிய புறவழிச் சாலைக்கான வரைவு சாத்தியக்கூறு அறிக்கை மத்திய அரசின் ஒப்புதலுக்காக 3 ஆண்டுகளுக்கு முன்பே அனுப்பப்பட்டது. இதன் தொடர்ச்சியாக மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறையின் தலைமைப் பொறியாளர் அவர்களின் நேரடி ஆய்வின்போது அவர் கேட்டுக்கொண்டதன்படி, தேசிய நெடுஞ்சாலையின் 49 நீட்சியும் இணைக்கும்படியாக, செக்கானூரணி வரை புறவழிச் சாலையின் நீளத்தை மேலும் 10 கிலோ மீட்டர் நீளத்திற்கு நீட்டித்து புறவழிச் சாலை அமைக்க மற்றொரு கருத்துரு மத்திய அரசின் ஒப்புதலுக்காக 21-1-2013 அன்று அனுப்பப்பட்டுள்ளது. இதற்கான சாத்தியக்கூறு அறிக்கை ரூபாய் 30 இலட்சம் செலவில் தயாரிக்கும் பணியை 2013-2014 ஆம் ஆண்டு திட்டப் பணிப் பட்டியலில் சேர்க்கப்பட்டு மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் கிடைத்த பின்பு, பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன் அவர்கள்.

**திரு. கா. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சென்ற ஆண்டில் மதுரை கிழக்குத் தொகுதியில் செக்கன்குளத்திலிருந்து மணலூர் வரை ஆற்றுக்குள் பாலம் வேண்டும் என்று கேட்டிருந்தேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசில் உடனடியாக 18 கோடி ரூபாய் செலவில் அந்தப் பாலத்தை அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். அதற்கு என் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஊரில் முழுவதும் இஸ்லாமிய மக்கள் இருக்கின்றார்கள். அனைவரும் அங்கே பாலம் வேண்டுமென்று எத்தனையோ

ஆண்டுகளாக கேட்டோம், வரவில்லை என்று அந்த ஜமாத்திலிருந்து ஒட்டுமொத்தமாக மக்கள் வந்து கேட்கிறார்கள். 'ஒருவருக்கு 95 வயது இருக்கும். அவர், 'நான் கிட்டத்தட்ட 20 வருடங்கள் 30 வருடங்களாகக் கேட்கிறேன், கிடைக்கவில்லை. அந்தப் பாலத்தைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்துவிட்டார்கள்' என்று சொல்லி, அவர்கள் நேரடியாக எம்.எல்.ஏ. ஹாஸ்டலுக்கு வந்து 'என்னுடைய வாழ்நாளிலேயே கண்ணாலே பார்த்துவிடுவேன்' என்று வாழ்த்திவிட்டுப் போனார்கள். அவரும் அம்மா அவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும் என்றார். அவர் சார்பாகவும், மதுரை கிழக்குத் தொகுதி மக்களின் சார்பாகவும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 357, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**357—**

**பாசன வசதி**

***3583—திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி கால்வாயில் தடுப்பணை கட்டி, புறவழிக் கால்வாய் அமைத்து பாசன வசதியை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி கால்வாயில் தடுப்பணை கட்டி மேல்வாய் வழியாக கால்வாய் வெட்டி பாசன வசதியைப் பெருக்கிட அரசு ஆவன செய்யுமா என்ற கேள்வியை இங்கே எழுப்பியுள்ளார்கள். திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், நாங்குநேரியன் கால்வாயை அகலப்படுத்தி, இக்கால்வாயிலிருந்து புதிதாக ஒரு கால்வாய் அமைத்து, அதன்மூலம் 46 குளங்களுக்குப் பாசன வசதி அளிக்க இத்திட்டம்